செய்தி வெளியீடு எண்:035 நாள் : 18.01.2014

**<u>செய்தி வெளியீடு</u>**

அறநெறியையும், ஆன்மீக உணர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி, புகழ் வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் பொக்கிஷங்களாக விளங்குவது திருக்கோயில்கள். இத்திருக்கோயில்களை புனரமைத்தல், அவைகளுக்கு குடமுழுக்கு நடத்துதல், அக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவு அளித்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல் போன்ற எண்ணற்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

1956ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. அதன் பின்னர், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத 490 திருக்கோயில்கள், ஒரு மகளிர் கல்லூரி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு ஆரம்பப் பள்ளி ஆகியவற்றை நிர்வகிக்க கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த திருக்கோயில்களில் ஒரு சில கோயில்களில் மட்டுமே ஓரளவு வருமானம் வரப்பெருகிறது. இந்த 490 திருக்கோயில்களின் நிர்வாகம், அன்றாடம் நடைபெறும் தினசரி பூஜைகள், திருவிழா செலவுகள், பராமரிப்பு, திருப்பணி செலவுகள், பணியாளர் சம்பளம் ஆகியவை ஒரு சில கோயில்களிலிருந்து வரும் வருமானம் மற்றும் அரசால் இத்திருக்கோயில்களின் நிர்வாகத்திற்கென வழங்கப்படும் 1 கோடி ரூபாய் மானியம் ஆகியவற்றைக் கொண்டு நடைபெறுகின்றன. ஆனால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் செலவினங்களால், இத்திருக்கோயில்களை நிர்வகிப்பதில் நிதி இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்கள், ஒரு பெண்கள் கல்லூரி, ஒரு மேல்நிலைப் பள்ளி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு ஆரம்பப் பள்ளி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நிதி இடர்பாடுகளை களைந்து செம்மையான நிர்வாகத்தை மேற்கொள்ள தற்போது இத்திருக்கோயில்களுக்கென அரசால் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படும் மானியத் தொகையான 1 கோடி ரூபாய் தொகையை 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகளாக பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்த ஓய்வு பெற்ற கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியமாக 750 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. பூசாரிகளின் வயதினையும், தற்பொழுது நிலவும் பொருளாதாரச் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகையை 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 18.1.2014.